1971 டிசம்பர் 14]

பித்தபோது, அவர்கள் அதை எதிர்த்து வழக்குப் போட்டிருக்கிருர்கள். வழக்கில் இருந்தாலும் மீண்டும் அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு வருவாய் அதிகாரிக்கு தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நல்லாக் விவசாயப் பண்ணையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னுர்கள். ஒரு காலத்திலே அந்த இடம் ஒன்பது லட்சம் பழ மரங்களைக் கொண்ட ஒரு பெரிய பழத்தோட்டமாக இருந்ததாகச் சொல்கிருர்கள். அந்த வழியாகச் செல்கிறவர்கள் ஒரு அணு கொடுத்தால் எவ்வளவு பழம் வேண்டுமானுலும் சாப்பிட்டுக் கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஆகவே நல்லாக் பண்ணையில் ஒரு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நானே அந்தப் பண்ணையை நேரில் சென்று பார்த்தேன். அங்கு பழ மரங்கள் எதுவும் இல்லை. அது பழங்கதையாக இருப்பதால், புதுக் கதையைப் பற்றி யோசிப்போம்.

Examinations for All India Services

* 386 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal with the Government to set up a training centre in this State, to assist the members of the Backward Classes sitting for the All India Examinations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்காக, பின்தங்கிய வகுப்பினர்களிலிருந்து 50 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க சென்னையில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, அப்படி நிறுவப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாகப் பின்தங்கிய மாணவர்களைச் சேர்க்க உத்தரவிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தத் தேர்வுக்குப் பயிற்சி பெறுவதற்காக இதுவரையில் குறைவாகவே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, மாவட்டவாரியாகப் பிரித்து, மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்ற நிலை எழவில்லை. 50 பேர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதற்கு இதுவரையில் 13 பேர் தான் விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : How long will the training be given to the backward students and what are the facilities given to the students staying here?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது கால கட்டம். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

DR H. V. HANDE : In view of the fact that I.A.S. is not the only all India service, but there is the entry into 'Dufferin', Indian Institute of Medical Science, All-India Medical Service, etc., and in these services the number of candidates getting through from our State is low, will the Government try to expand it a little so as to cover all the above services like entry to Dufferin, technical services, etc., so that more applicants may be coming forward ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்போது இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஐ. ஏ. எஸ். தேர்வுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Government Servants' Co-operative House and Land Society

* 387 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Madras Government Servants' Co-operative House and Land Society Limited (Regd. XNC 644) was liquidated ;

(*b*) if so, whether arrangements had been made to refund the amounts due to the members; and

(*c*) the present position of the affairs of the Society?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இதுவரை கலைக்கப்படவில்லை.

(இ) & (உ) இந்த சங்கத்தில் பணத்தை கையாடல் செய்த குற்றத்திற்காக சங்கத்தின் நிர்வாகிகள் ஐந்து பேர்களின் மேல் சென்னை VIII -வது குற்றவிசாரணை மாநகர நீதிபதியிடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் மட்டுமே குற்றவாளி என்று அவருக்கு 9 மாத கடுங்காவல் தண்டனை கொடுத்து மற்றவர்களை விடுதலை செய்தும் நீதிபதி தீர்ப்பளித்தார். விடுதலை செய்யப்பட்ட நான்கு பேர் மேலும் குற்றம் இருப்பதால், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் மேல் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சங்கத்தின் புத்தகங்களும் பதிவேடுகளும் நீதிமன்றத்தில் இருக்கின்றன. நீதிமன்றத்திலிருந்து இவைகள் திரும்பக் கிடைத்ததும் சங்கத்தை கலைப்பதற்கும் அங்கத்தினர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.